BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# வேள்பாரி புதினத்தில் இயற்கையோடு இயைந்த மலைவாழ் மக்களின் வாழ்வியல்

**திருமதி சு. சத்யா**
[REG.No:MKU24FOL11363], பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி, இராஜபாளையம். Email: sathyaganesan3006@gmail.com
நெறியாளர்: **முனைவர் ந.அமுதவல்லி**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

**ஆய்வுச் சுருக்கம்**

கடையெழு வள்ளல்களில் ஒருவரான வேள்பாரியின் வரலாற்றுத் தகவல்கள் சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு தமக்கே உரிய புனைவின் மூலம் எழுத்தாளர் சு.வெங்கடேசன் வேள்பாரி புதினத்தைப் படைத்திருக்கிறார். இப்புனைவு பல்வேறு கிளைக் கதைகளைக் கொண்டுள்ளது. பறம்பு மலை எனப்படுகின்ற பாரி அரசாட்சி செலுத்திய மலைப் பகுதியும், அம்மலையினைச் சுற்றியுள்ள குறுநில மன்னர்களின் பகுதியும், அப்போது மூவேந்தர்கள் அரசு என்ற அமைப்பை உருவாக்கிய நிலையையும் வெளிப்படுத்தும் விதமாக இப்புதினம் அமைந்துள்ளது. மலையும் மலை சார்ந்த பகுதியான குறிஞ்சி நிலத்தையும், அம்மலையைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளைப் பற்றியும், ஆங்காங்கே வாழ்ந்த பழங்குடி மக்களின் வாழ்வியல் முறைகளைப் பற்றியும் ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். கதை மாந்தர்களுடைய பெயர்கள், உணவுப் பழக்கம், மருத்துவம், போர்முறைகள், விருந்தோம்பல், வழிபாட்டு முறைகள் முதலான பல்வேறு அம்சங்களின் பதிவாக இப்புளைவு அமைந்திருப்பது சிறப்பிற்குரிய ஒன்றாகும். இப்புதினத்தின் பல்வேறு கூறுகள் மலைவாழ் மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வியலை வெளிப்படுத்துகிறது. இவ்வாய்வுக் கட்டுரை அதனை வெளிக்கொணர முற்படுகிறது.

**திறவுச் சொற்கள்**

பறம்பு மலை மக்கள், பழியர், முதுவன், கொற்றவைக் கூத்து, இயற்கை மருந்து, அகுதை.

**முன்னுரை**

ஒரு நாட்டின் தொன்றுகொட்டு வாழ்ந்து வருகின்ற மிக பழமையான மக்களை பழங்குடி மக்கள் என்று அழைப்பர். நாட்டின் பல்வேறு மலைப்பகுதிகளில் 400-க்கும் மேற்பட்ட பழங்குடி இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டு மலைப்பகுதிகளில் பழியர், படகர், தோடர், மன்னான், முதுவர், ஊராளி, குறவர், குன்னுவர், புலையர் போன்ற 42 பழங்குடி மக்கள் மலைகளில் வாழ்கின்றனர். மனித குலம் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையே நாகரீக வளர்ச்சியின் அடிப்படை அறிவாக இருந்திருக்கும். அவ்வகையில் வேள்பாரி புதின்ம் பதிவு செய்யும் மலைவாழ் மக்களின் வாழ்வியலை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

**வேள்பாரியும் பறம்பு மலையும்**

சங்க காலத்தில் தமிழ் நிலப் பகுதிகளில் பல்வேறு இனக் குழுக்கள் ஆங்காங்கு இருந்துள்ளனர். அவர்கள் தங்களை நாடி வந்த கலைஞர்களுக்குப் பரிசுகளை வழங்கியுள்ளனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. அக்காலத்தில் அரசர்கள் பெரிய கோட்டைகளையும் அரண்களையும் கொண்டு தங்கள் எல்லைகளைப் பாதுகாத்தனர். ஆனால் பாரி உள்ளிட்ட வள்ளல்கள் தாங்கள் வாழ்ந்த பகுதிகளில் காணப்பட்ட மலைப் பகுதிகளைத் தங்களுடைய அரண்களாக அமைத்தனர். இதனை, *“நாங்கள் காட்டு உயிரினங்கள் நுகரவும் நெருங்கவும் முடியாத ஒரு பெருவேலி அமைத்து உள்ளோம். தலைமுறை தலைமுறையாக எங்கள் தாவர வேரின் சாகரம் இந்த நாகப்பச்சை வேலி தான்” (வேள்பாரி,*

*பக்.130,131)* என்ற வேள்பாரி நாவல் மூலம் அக்கால மக்கள் இயற்கையோடு வாழ்ந்த நிலையை அறிந்து கொள்ள முடிகின்றது.




பறம்பு மக்கள் இயற்கையின் பின்னால் ஓடி ஆடி களித்து வாழ்ந்துள்ளனர். அவர்கள் ஆசையின் பொருட்டு சேமித்து சேமித்து வைக்காமல் தங்களுடைய தேவைகளுக்கு மட்டுமே உழைத்த நிலையினை நாவலில் ஆங்காங்கே காண முடிகின்றது. இருப்பதை வைத்து இன்பமாக வாழ்ந்து உள்ளனர். இச்செய்தியை, *"ஒவ்வொருவக்கு என தனித்த சொத்தும் எப்பாடு பட்டாயினும் அதைச் சேமித்து வைக்க வேண்டும் என்ற பெரும் தாகமும் இங்கு இல்லை"(வேள்பாரி, ப.97)* என்ற வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

பழங்கால மக்கள் இயற்கையின் பின்னால் வாழ்ந்துள்ளனர். ஆனால் இன்று பணம் பொருள் சேர்த்து சொத்து சேர்த்து வைக்க வேண்டுமென பொருளாதாரத்தின் பின்னால் நாம் ஓடிக் கொண்டிருக்கிறோம். இத்தகைய இன்றைய நிலைக்கு மாறான தன்மையை வேள்பாரி புதினத்தில் காணமுடிகிறது. *"இயற்கை வழங்குகிறது நாம் வாழ்கிறோம். இடையில் விற்கவும் வாங்கவும் நாம் யார்." (வேள்பாரி, ப.114)* என்று வரிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

பறம்பு நாட்டில் ஆபத்து ஏதேனும் வந்தால் போரிடும் ஆயுதங்களாகவும், காக்கும் மருத்துவ கலசங்களாகவும், இயற்கையின் ஆற்றல்களை பயன்படுத்தி உள்ளனர். *"வாள்முனை நெஞ்சை கீறினாலும் கவலை கொள்ளும் வீரன் எவனும் இல்லை. அத்தாப் பொறுத்தி மூலிகையைக் கண்டறிந்த பிறகு சதையை அறுத்துக் கொண்டு போனாலும் பொருத்திக் கொடுக்கிறான் மருத்துவன்"* என்ற வரிகளின் மூலம் அக்காலத்திய மருத்துவ முறையை அறிந்து கொள்ள முடிகின்றது.

சங்க இலக்கிய பாடல்களைத் தொடர்ந்து சங்கம் மருவிய காலத்தில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஏறக்குறைய மூன்று நூல்கள் அதாவது திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்ற நூல்கள் மருத்துவ குணத்தினைப் பற்றித் தெளிவாக விளக்குகின்ற நிலையை இங்கு சுட்டிக்காட்டுவது என்பது அவசியமாகின்றது. அந்த வகையில் அக்காலத்தில் மலைப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இணைந்த மருத்துவ முறையினை அறிந்திருந்தனர் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**மலைவாழ் மக்களின் பெயர்களும், கூத்து நிகழ்வுகளும்**

ஒரு குறிப்பிட்ட மக்களின் அல்லது உயிரினங்களின் வாழ்க்கை முறையான அன்றாட நடைமுறைகளில் செயல்பாடுகள், நடவடிக்கைகள், அவர்கள் வாழ்வு சார்ந்த பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை வாழ்வியல் என்னும் சொல்லாடல் குறிப்பிடுகின்றது. வேள்பாரி நாவலில் இடம்பெற்ற கதை மாந்தர்களின் பெயர்களில் ஆதன், செம்பன், நாகு, நீலன், முதுவன், பழையன், பழைச்சி, நாகினி, எவ்வி, கூழையன், தேக்கன், செம்பா, கோவன், முடியன் என பெரும்பாலான தூய தமிழ்ச் சொற்களில் அமைந்த பெயர்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் மலைவாழ் பழங்குடி மக்களின் பெயர்களாக அமைந்துள்ளன. நாவலில் பதிவு செய்துள்ள கூத்துக்கள் கொற்றவை கூத்து, குரவைக் கூத்து, மண நிகழ்வில் நடைபெறும் கூத்து போன்றவையாகும். குன்னுவர்களின் கூத்து நிகழ்த்தும் வழக்கத்தோடு இதனை ஒப்பிட்டு அறியலாம். பழியர் முதலிய பழங்குடி மக்களிடம் ஆடல், பாடல் உணர்ச்சி மிகுதியாக உண்டு. பங்குனி, சித்திரை மாதங்களில் இந்த களியாட்டம் அதிகம் இருக்கும். குழல், பெருந்தலை, சிறுத்தலை என்னும் மேளம், சந்தக்குழல், கிண்ணாரம் ஆகியன முக்கிய இசைக்கருவிகளைக் கூத்துகளில் இசைத்து

மகிழ்வர். புலையர் இன மக்களிடம் ‘குன்னூட்டம்’ என்ற ஒரு வகை சிறந்த ஆட்டம் உண்டு என்று மேல்மலை மக்கள் என்ற புத்தகத்தில் திரு சி.அன்னகாமு பதிவு செய்துள்ளார். அவ்வகையில் வேள்பாரி நாவலிலும் ஒவ்வொரு குலத்தைச் சேர்ந்தோர் ஒவ்வொரு வகையான கூத்து நிகழ்த்துவதையும் இசைக்கருவிகள் இசைத்து பேரொலி எழுப்பி ஆரவாரப்படுத்துதலையும் சிறப்பாக நாவல் உணர்த்திச் செல்கிறது.

**கொற்றவை விழா**

தமிழர் தம் வாழ்வியலில் உளமகிழ்ச்சிக்காக சில கட்டமைப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றர். கட்டமைப்புகளில் ஒன்றாக கொற்றவை வழிபாடு. கொற்றவை ஆளுமையின் தெய்வம். இந்த கட்டமைப்புக்களைத் தலைமுறை தலைமுறையாக பின்பற்றுகின்ற போது அது மரபாக மையம் கொள்கின்றது. சங்ககாலத்தில் வெற்றி தெய்வமாகிய கொற்றவையை வணங்கி குருதி கொடுத்துவிட்டுதான் போர்க்களம் செல்வது என்பது வழக்கமாக இருந்தது. அதே வழக்கம் பறம்பு நாட்டிலும் காணப்பட்டது. காடறிய போகும்போது கூட கொற்றவையை வணங்கி விட்டுத்தான் சென்றுள்ளனர் இது பற்றிய குறிப்பு. *“தாய் தெய்வ வழிபாடு தான் எல்லாவற்றிலும் மூத்தது கொற்றவை ஈன்ற பிள்ளை தானே முருகன்”(வேள்பாரி, ப.439)* என்ற வரிகள் இங்கு நினைவு கூறப்பட்டது. இதன் மூலம் கொற்றவை வழிபாடு பறம்பில் இருந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது.

பறம்பு மலையில் கொற்றவை விழா 17 நாட்கள் நடைபெற்றுள்ளதாக அறிந்து கொள்ள முடிகின்றது. திருவிழாவில் மூவேந்தர்களால் அழிக்கப்பட்டு வரம்பூரில் வசித்த குலத்தின் மிச்சங்கள் ஒவ்வொரு நாளும் தங்களின் குலப் பாடலை பாடி கொற்றவையிடம் சூளுரைத்து வழிபட்டதாக குறிப்பு இடம்பெறுகின்றது. *“அவர்களின் போர் தெய்வமான கொற்றவையிடம் முறையிட்டு ஆறாத் துயரைக் கொட்டி வஞ்சினம் உரைக்கும் விழா தான் இது”(வேள்பாரி, ப.142)* என்னும் வரிகள் கொற்றவை விழாவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன.

பறம்பு நாட்டில் குழுச்சமூகத்தில் பெண்ணிற்குத் தலைமை இடம் கொடுத்துள்ளனர். ஆட்சிப் பொறுப்பில் ஆண் இருந்தாலும், குலத்தின் மூதாதையராலும், குல நாகினியாலும் பாதுகாத்திடும் அரணாக நாகப்பச்சை வேலியையும் ஒளி வலையையும் கட்டி பறம்பு மலையை காத்துவந்ததை, *“அவர்கள் தான் பருவ காலங்களின் தன்மையை அறிந்து அதிலுள்ள எச்சரிக்கையுடன் செய்ய வேண்டியவற்றைச் செய்து இந்த நகரையும் எங்களையும் காத்து வருகிறவர்கள்”(வேள்பாரி. ப.1039)* என்றதன் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

தங்களுடைய குலத்தின் அடையாளங்களைக் காப்பது என்பது தங்களின் தலையாய கடமையாக பறம்பு மலையில் வாழும் மக்கள் கடைப்பிடித்துள்ளனர். மேலும், தங்களுக்கே உரித்தான குல அடையாளங்களைப் பகிர்ந்து கொள்ளவில்லை என்பதனை, *“தங்குலம் அல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாதவை உலகில் நிறைய உண்டல்லவா”(வேள்பாரி, ப.394)* என்று வரும் வரிகள் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன.

**பேரரசு உருவாக்கம்**

சங்ககாலம் என்பது இனக்குழுக்களின் காலமாக அறியப்படுகின்றது. அக்கால கட்டத்தில் பல்வேறு இன குழுக்கள் தமிழ் நிலப்பகுதியில் வாழந்து வந்தனர். அதே காலகட்டத்தில் இனக்குழுக்களை அழித்து வேந்தர்களின் ஆட்சி தொடங்கியதாகவும், அக்காலகட்டம் இருந்துள்ளது. சேர, சோழ, பாண்டியர்களின் ஆதிக்கத்தில் அடிபணியாத பல்வேறு குறுநில மன்னர்களான, வேளீர்கள், கடையேழு வள்ளல்கள் போன்றோர் தமிழ் நிலப் பகுதியில் ஆட்சி செய்து வாழ்ந்துள்ளனர்.

கடையேழு வள்ளல்கள் என அறியப்படுகின்ற வேள்பாரி, அதியமான், வல்வில்ஓரி, மலையமான், திருமுடிக்காரி, பேகன், ஆய்ஆண்டிரன் ஆகியோர் தமிழ் நிலப் பகுதியில் பல்வேறு பகுதிகளில் ஆட்சி புரிந்தவர்களாக அறியப்படுகின்றனர்.

சேர, சோழ, பாண்டிய வேந்தர்களின் ஆட்சியில் அடிபணியாத 20க்கும் மேற்பட்ட குறுநில மன்னர்கள், வேளிர்கள், வள்ளல்கள் மலையும் மலை சார்ந்த பகுதிகளில் வாழ்ந்து வந்துள்ளனர். அக்காலகட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் வாழ்ந்த 16 இன குழுக்களின் தலைமையாக வேளிர் குல தலைமைப் பறம்பு நாட்டினைத் தலைமை இடமாகக் கொண்டு ஆட்சி நடத்தியுள்ளது. இனக்குழுக்களின் தலைமையாக வேளிர்குலம் இருந்ததை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. ஒவ்வொரு இனக்குழுக்களும்

மூவேந்தர்களிடம் இருந்து தங்கள் குலங்களைக் காக்க முடியாமல் போராடிக் கொண்டிருந்தபோது பறம்பு நாடு மூவேந்தர்களால் அவல நிலைக்கு ஆளாக்கப்பட்ட 16 குலங்களின் வழித்தோன்றல்களுக்கு அடைக்கலம் தந்துள்ளது. இதனை, *“இந்த மண்ணெங்கும் சிந்தப்பட்ட குருதியும் கண்ணீரும் உலராமல் உனது உள்ளங்கையில் இருக்கின்றன பாரி.”(வேள்பாரி, ப.225)* என்று கபிலர் குறிப்பிடுவதில் இருந்து பறம்பு மலையின் முக்கியத்துவத்தையும் மக்கள் பாரியின் மேல் வைத்திருந்த நம்பிக்கையையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

அகுதை குலத்தினரின் வேளாண் அறிவு புதினத்தின்படி அகுதையின் குலத்தினர் வைகை ஆற்றங்கரையில் அமைந்திருந்த கூடல் என்ற வளமான நகரத்தை ஆண்டவர்கள். *“வேளாண் அறிவின் நுணுக்கத்தை இந்த உலகுக்குக் கண்டறிந்து சொன்னது அகுதையின் குலம் அல்லவா” (வேள்பாரி, ப.146)* என்று பாரி சொல்வதாகப் புதனத்தில் இடம்பெற்றுள்ளது. இவர்களுக்கு வேளாண்மை அறிவியலில் இருந்த நுட்பமான அறிவு நாவலில் மிக முக்கிய பங்களிப்பாக குறிப்பிடப்படுகிறது. மருத நிலமே வேளாண்மைக்கு ஏற்றது. புதினத்திலும் அகுதையின் குடிகள் மருத நிலமாகிய கூடல் நகரில் வேளாண்மை தொழிலில் சிறந்து விளங்கினர். *“குறிஞ்சி நிலம் கற்களாலான மண்ணை உடையது, முல்லை வெண்ணிற மண்ணை உடையது, நெய்தல் உவர் மண் நிலம், பாலை செம்மை ஏறியது, மருதம் மட்டுமே பொன்னிறமாக கரிசலும் வண்டலும் மேவி கிடப்பது அதனாலேயே மண்ணையும் நீரையும் பிசைந்து உணவாக மாற்றக்கூடிய வித்தையை கூடல்வாசிகள் முந்தி கற்றனர்”(வேள்பாரி, ப.146)* என்ற வரிகள் கூடல்வாசிகளின் வேளாண்மை அறிவு குறித்த அறிவுத் திறனை அறிவிக்கின்றன. *“தாவரங்களின் வேர்களை எந்த மண் தனது மார்போடு உள்வாங்கி அனைத்துக் கொள்ளும் எந்த மண் தலையில் முட்டி வெளித்தள்ளும் என அவர்கள் கண்டறிந்தனர்.”*

*(வேள்பாரி, ப-146).*

ஒவ்வொரு மண்ணுக்கும் உரிய தனித்தன்மைகளைக் கூடல் வாசிகள் அறிந்திருந்ததை இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. மண்ணின் வகைக்கேற்ற உழவுக் கருவிகளை கூடல்வாசிகள் பயன்படுத்தியதாகக் கபிலர் பாரியிடம் கூறக்கூடிய செய்தியும் நாவலில் பதிவாகின்றது. *“வண்டல் மண்ணுக்கு, இருகிய மண்ணுக்கு, இள மண்ணுக்கு என உழவுப்படைகளை வகைப்படுத்தி உருவாக்கினர். தாளி மரமும் வேலா மரமும் வெக்காளி மரமும் கொண்டு கலப்பைகள் செய்து மண்ணின் தன்மைக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்தினர்”(வேள்பாரி, ப.158).*

இவ்வாறு உழுப்படைகளைக் கொண்டு உழுவதற்குக் கால்நடைகளைப் பயன்படுத்துவர். அதற்கு மரத்தினால் ஆன குறுக்கு ஆரம் ஒன்றைச் செய்து அதனையும் உழுபடையையும் இணைத்து கால்நடைகளின் கழுத்தில் கட்டி இழுக்க வேண்டும். அத்தி மரத்தில் குறுக்கு ஆரத்தைச் செய்து பயன்படுத்தினால் கால்நடைகளின் கழுத்தில் வடு பிடிக்காது என்று அகுதை குலத்தினர் அறிந்துள்ளனர். இது அகுதை குலத்தினரின் வேளாண் அறிவுக்கும் உயிர்ம நேயத்திற்கும் சான்றாக அமையும் பதிவுகள் ஆகும்.

மேலும், ஆவார இலையை அடி மண்ணில் இட்டு உழும்போது விளைச்சல் அதிகரிக்கும் என்பதையும் கூடல்வாசிகள் அறிந்திருந்தனர். *“பயிர்களுக்கு நல்ல ஆகாரம் இந்த இலை என அவன் சொன்னதை இரண்டு விளைச்சலுக்குப் பிறகு உண்மை என கூடல்வாசிகள் ஏற்றனர். ஆகார இலை என்ற இந்த இலைக்குப் பெயர் சூட்டினர் அவர்களே அறியாமல் அது ஆவார இலையாக வளைந்து கொண்டது” (வேள்பாரி, ப.159).*

இவ்வாறாக தாவரத்தையும் மண்ணையும் நினைத்து பல்வேறு வேளாண் நுட்பங்களை கூடல்வாசிகள் செயல்படுத்தியதைப் புதினத்தில் இருந்து அறிய முடிகிறது. அகுதை குலத்தின் குலப் பறவையாக புதினத்தில் ’அசுணமா’ என்னும் பறவை சுட்டப்படுகிறது. அப்பறவை கொன்றை மரத்தில் மட்டுமே தங்கக்கூடியது எனவும் கொன்றைமர யாழின் இசைக்கு மயங்குவது எனவும் புதினத்தில் கூறப்படுகிறது. கூடல்வாசிகள் வேளாண்மை அறிவைப் பறவைகளிடம் இருந்து கற்றுக் கொண்டனர். இயற்கையோடும் இணைந்து வாழும் இவர்களுக்குப் பறவைகள் மிகவும் உதவியாக இருந்தன. *“பறவைகளின் அலகு பறித்து தின்னும் காட்டுக் கதிர்களைக் கண்டறிந்தனர். பறவைகளின் கழிவில் இருந்து முளைவிடும் தானியமணிகள் எவை எவை என்பதைப் பற்றிய அறிவுசேகரம் அவர்களிடம் இருந்தது”(வேள்பாரி, ப.145)* என்ற பதிவின் மூலம் நாம் உணரலாம். வேளாண்மைக்கு உதவிய பறவைகளைத் தெய்வமாகவே

வழிபட்டனர். *"பறவைகளை வேண்டிக் கொள்ள மட்டுமே செய்வர். ஏனென்றால் பறவையே ஆசான் பறவையின் எச்சம் கண்டு பயிர் செய்து பழகியவர்கள் பறவை உண்ட மிச்சமே நமக்கு என அறம் வகுத்துக் கொண்டனர்"(வேள்பாரி, ப.146)* இப்பதிவு நிலத்தை தன் தேவைக்காக மட்டுமே பயன்படுத்தும் மனிதப் பேராசைக்கு எதிரான ஒரு வாழ்வியலை உணர்த்துகிறது. புதினத்தின் இப்பதிவுகள் சமவெளி பேரரசுகளின் ஒருவரை ஒருவர் மிஞ்சும் வணிகம் சார்ந்த நோக்கமும், இத்தகைய நோக்கமின்றி வாழும் பறம்பு மலைவாழ் மக்களின் அறமும் புதினம் எடுத்துரைக்கின்றது.

"மனித சமுதாயமே பழங்குடி அமைப்பிலிருந்து வளர்ந்து வந்ததுதான் என்று சமூக அறிஞர்கள் கூறுகின்றனர் இம்மக்கள் சமவெளி பகுதியில் வாழ்ந்து வந்த சூழலில் மேய்ச்சல் நிலங்கள் உள்ள ஆற்றங்கரை ஓரங்களை மக்கள் தேர்ந்தெடுத்து பல குழுக்களாக குடியேறி நதித்துறை பண்பாட்டை வளர்த்து வந்தனர். இவர்களோடு தொடர்புடைய பிற இன மக்களும் பலவகையான இயற்கைசார் மாற்றங்களாலும் அறிவியல் வளர்ச்சியினாலும் நாகரிகம் அடைந்தனர். இருப்பினும் சில இனத்தவர்கள் வாழ்வில் பின்தங்கியவர்களாக கல்வியறிவு அற்ற நிலையிலும், புதுமையைக் கண்டு அஞ்சும் நிலையிலும், மறைவான பகுதியில் வாழ்ந்து வரும் மக்களாக இப்பழங்குடியின மலை மக்கள் இருக்கின்றனர்" என்று முனைவர் க.அழகர் என்பவர் தன்னுடைய ஆய்வில் குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

இவ்வாறாக பறம்பு மலை எனப்படுகின்ற பாரி அரசாட்சி செலுத்திய மலைப்பகுதியும் அம்மலையினைச் சுற்றியுள்ள குறுநில மன்னர்களின் பகுதியும் அப்போது மூவேந்தர்கள் அரசு என்ற அமைப்பை உருவாக்கிய நிலையையும் வெளிப்படுத்தும் நிலையாய் வேள்பாரி புதினம் அமைக்கப்பட்டுள்ளது மக்கள் மற்றும் அவர்களை ஆண்ட பாரியின் வாழ்வியல் சிந்தனைகள் போன்றவற்றையும் மட்டுமல்லாமல் பறம்பு மக்களின் இல்வாழ்க்கை முறை போர்முறை மணநிகழ்வு போன்ற அனைத்தும் மலைவாழ் மக்கள் வாழ்வியல் கூறுகளுக்கு ஒப்ப ஆசிரியர் பதிவு செய்துள்ளார் என்பதனை ஆய்வு கட்டுரையின் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. வெங்கடேசன்.சு, வீரயுக நாயகன் வேள்பாரி, முதல் தொகுதி, விகடன் பிரசுரம், சென்னை, பத்தாம் பதிப்பு – 2023.
2. அழகர்.க முனைவர், விருதுநகர் மாவட்டப் பழியர்களின் வாழ்வியல், வெண்ணிலா வெளியீடு, முதற்பதிப்பு-2004.
3. அன்னகாமு.சி, மேல்மலை மக்கள், கமலா அச்சகம், சென்னை, முதற்பதிப்பு-1961.

*****